நீலகிரி மாவட்டம் சார்பு நீதிமன்றத்தில் 2026-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 4-ஆம் நாள் சாட்சியாகிய- கண்ணன் என்பவரின் வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி. தமிழ்மொழி, இருக்கை எழுத்தர்-2 அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணன் | மதம் | : இந்து |
| தந்தை./கணவர் பெயர் | : கந்தசாமி | ஜாதி | : |
| கிராமம் | : உதகை | தொழில் | : மேலாளர் |
| தாலுக்கா | : உதகை | வயது | : 40 |

**4.6.2026**

**C.O.S. No.25/2023 (P.W - 1)**

விசாரணை தொடங்கும் நேரம்:- 12.06 PM

விசாணை முடியும் நேரம் :- 12.10 PM

<u>முதல் விசாரணை :-</u>

நான் இந்த வழக்கின் வாதிவங்கியின் மேலாளராவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது எனது கையொப்பம் தான். அது நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். 28.10.2016 ஆம் தேதியிட்ட கடன் விண்ணப்பத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா**.**சா**.**ஆ**-1** ஆகும். 10.5.2017 ஆம் தேதியிட்ட கடன் அனுமதி கடிதத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா**.**சா**.**ஆ**-2** ஆகும். 1.6.2017 ம் தேதியிட்ட ரொக்க (கடன்) ஒப்பந்தத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா**.**சா**.**ஆ**-3** ஆகும். 1.6.2017 ஆம் தேதியிட்ட ஜாமின் ஒப்பந்தத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா**.**சா**.**ஆ**-4** ஆகும். 1.6.2017 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி வாதிக்கு வழங்கிய கடனுருசி சீட்டின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு

செய்யப்பட்டது) வா.சா.ஆ-**5** ஆகும். 7.5.2018 ஆம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி வாதிக்கு வழங்கிய கடன் விண்ணப்பத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ-**6** ஆகும். 7.5.2018 ம் ஆம் தேதியிட்ட கடன் அனுமதி கடிதத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ-**7** ஆகும். 1.6.2018 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி வாதிக்கு வழங்கிய கடன் புதிப்பிப்பு கடிதத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ-**8** ஆகும். 31.5.2020 ம் 1 ம் பிரதிவாதி வாதிக்கு வழங்கிய கடன் உயிர்ப்பு கடிதத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ-**9** ஆகும். 27.9.2023 ம் தேதியிட்ட மாவட்ட சட்ட உதவி மையத்தின் மூலம் வழங்கப்பட்ட பாரம்-3 ன் அறிக்கையின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ-**10** ஆகும். 20.4.2023 ம் தேதியிட்ட வாதி வழங்கிய கடனுக்கான வங்கி கணக்கு பட்டியல் குறிப்பாணையுடன் கூடியது வா.சா.ஆ-**11** ஆகும். ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என பிராத்திக்கிறேன்.